Registered as a News Paper    பக்கங்கள்: 04    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM    Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 03    திருவள்ளுவர் ஆண்டு 2023    ஆவணி 18    (03 - 09 - 1992)    வியாழக்கிழமை    ஓசை 198

## பிரச்சினையை சுமுகமாக தீர்ப்பதில் காவல்துறை தீவிர முயற்சி

தமிழீழ காவல்துறை செயற்படத் தொடங்கிய குறுகிய காலத்தினுள்ளே சமூகத்தில் ஏற்பட்டுவரும் பல்வேறு பிரச்சினைகளையும் சுமுகமாகத் தீர்த்து வைப்பதில் குறிப்பிடத்தக்க பங்காற்றி வருவது தெரிந்ததே. குறிப்பாக இளைய தலைமுறையினர் முகம் கொடுக்கும் திருமணப் பிரச்சினைகள் காவல்துறையினரால் சுமுகமாகத் தீர்த்துவைக்கப்படுகின்றது. இவ்வகையில் ஜனவரி முதலாம் திகதி முதல் ஜூன் முப்பதாம் திகதிக்கு உட்பட்ட ஆறு மாதகாலத்தில் மட்டும் தமிழீழ காவல்துறையினரால் இருநூற்று எட்டுக்கும் மேற்பட்ட திருமணங்கள் நிறைவேற்றி வைக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணம் காவல் பணி

(4ஆம் பக்கம் பார்க்க

# கிழக்கிலங்கையில் பதற்றநிலை

# பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்

### அரச அதிபர் கொழும்பு பயணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். அரச அதிபர் மிக விரைவில் கொழும்பு செல்ல உள்ளார். எதிர்வரும் 15 ஆம் திகதி கொழும்பில் நடைபெற இருக்கும் தேசிய புனர்வாழ்வுக்கான வழிகாட்டல் குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காகவும் மேலும் சில அலுவல்களுக்காகவுமே கொழும்பு செல்ல இருக்கிறார். (க)

### குமணவில் ஒய்வூதிய வவுச்சர்கள்

(யாழ்ப்பாணம்)

இன்னும் சில தினங்களில் பருத்தித்துறையை வந்தடையும் என எதிர்பார்க்கப்படும் ''குமண'' கப்பலில் செப்ரெம்பர் மாதத்திற்கான ஒய்வூதிய வவுச்சர்களும், பாடசாலைப் பிள்ளைகளுக்கான இலவச மதிய உணவு முத்திரைகளும் எடுத்து வரப்படுகின்றன என யாழ் செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன (பா)

### குமாரியில் பரீட்சை விடைத்தாள்

பருத்தித்துறையில் இருந்து கொழும்பு நோக்கிப்புறப்பட இருக்கும் 'குமாரி'' கப்பலில் பரீட்சை வினாத்தாள்களும் எடுத்துச்செல்லப்பட உள்ளது. இதற்கான நடவடிக்கைகளை கல்வித் திணைக்களம் மேற்கொண்டுள்ளது.

## புலிகள் தாக்கலாமெனவும் அச்சம்

(மட்டக்களப்பு)

கிழக்கில் மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் பதற்ற நிலை அதிகரித்து வருவதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. தினமும கிராமங்கள் சுற்றிவளைக்கப்படுவதும் பலர் கைதாவதும், தமிழர் - முஸ்லிம்களுக்கிடையில் முறுகல் நிலை அதிகரித்து வருவதும் இதற்குக் காரணங்களாகும் இதேவேளை கிழக்கில் புலிகளின் தாக்குதல்கள் அதிகரிக்கலாம் என்பதினாலும் முஸ்லிம்-தமிழர்களுக்கிடையில் மோதல்கள் வெடிக்கலாம் என்ற காரணத்தினாலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப் பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கடந்த ஒருவார காலமாக மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் சிறிலங்கா இராணுவம் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் சுற்றிவளைப்புக்களும், கைதுகளும் தமிழ் மக்கள் மத்தியில பதற்றததைத் தோற்றுவித்துள்ளது.

கடந்த வாரத்தில் மட்டும் 20 கிராமங்களுக்கு மேல்சுற்றிவளைக்கப்பட்டதாகவும், நூற்றுக் கணக்கானோர் விசாரணைக்கு உடபடுத்தப்பட்டதாகவும் பலர் முகாம்களுக்குக் கொணடு செல்லப்பட்டதாகவும் தெரிவிககப்படுகிறது. மேலும் சிலர் சுடடுக் கொல்லப்படட தாகவும் அறியவருகிறது. இதனைத் தொடர்ந்து தமிழ் கிராமங்களில் ஒரு வித பதற்றம் உருவாகியுள்ளது.

மேலும் சாய்ந்த மருதுவில் நடைபெற்ற குண்டுவெடிப்பும் அதில் 24 பேர் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து தமிழர்கள் மீது முஸ்லிம்கள் தாக்கலாம் எனவும், இதனால் கலவரம் வெடிக்கலாம் என்றஓர் நெருக்கடியான நிலை உருவாகியுள்ளது

இதனைக் தொடர்ந்து

[4 ஆம் பக்கம் பார்க்க]

### வீரச்சாவு



லெப். அன்பழகன்

(யாழ்ப்பாணம்)

தட்டுவன்கொட்டிப் பகுதியில் 31-8-92 அன்று அதிகாலை 2.20 மணியளவில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட திடீர் மோதலில் லெப்டினன்ட் அன்பழகன் (கந்தையா சசிக்குமார் திருநகர், கிளிநொச்சி) என்பவர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டார் இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துள்ளனர்.

### எறிகணை வீச்சு

முல்லைத்தீவு இராணுவ முகாம் பகுதியிலிருந்தும் அளம்பில் பகுதியிலிருந்தும் தண்ணீரூற்று மற்றும் குடியிருப்பு நிறைந்த பகுதிகள் நோக்கி எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரியவருகிறது இதேபோன்ற தாக்குதல்கள் வவுனியா செட்டிகுளம் உதவி அரச அதிகாரிகள் பிரிவுகளிலிருக்கும் இராணுவ முகாம்களிலிருந்தும் நடத்தப் பட்டுள்ளன.

கிழக்கில் தமிழ் மக்கள்

## மீன்பிடி வள்ளம் பெற சிங்கள அதிகாரிகள் தடை

களுவாஞ்சிக்குடிப் பகுதியில் பாதிக்சப்பட்ட தமிழ் மக்களுக்கு மீன்பிடிப் படகு வழங்க சமூக சேவை நிறுவனம் ஒன்று முன்வந்த போதும் சிங்கள அரசாங்க அதிகாரிகளால் அது தடுக்கட்பட்டிருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் கூறுகின்றன.

இதேவேளை நாவற்குடாப் பகுதியில் மீனவரான விஜயன் என்பவரின் வலைகள் களவாடப்பட்டுள்ளது அத்துடன் அவர் முஸ்லிம் மீனவர்களின் துப்பாக்கிப்பிரயோகத்தில் காயமடைந்துள்ளார்.

இடம் பெயர்ந்த மக்களுக்கு

## தென்மராட்சிப் பகுதியில் குடிசைகள் அமைக்கஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்த மக்களின இருப்பிட வசதிக்கென தென்மராட்சிப் பகுதியில் குடிசைகள் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகம் 500 குடிசைகளையும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் 500 குடிசைகளையும் அமைப்பதற்கு முன்வந்திருக்கின்றன.

அத்துடன் மேலும் இருப்பிட வசதிகள் தேவைப்படும் பகுதிகளில் தேவையான அளவு குடிசைகளை அமைப்பதற்கு யாழ் செயலகமும் அரச சார்பற்ற நிறுவனங்களும் இணைந்து நடவடிக்கை எடுத்து வருகின்றன (க)

## யாழ். வைத்தியசாலையில் மருந்துப்பொருள் தட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா மருத்துவமனையில் சில முக்கிய உயிர் காப்பு மருந்துப் பொருள்களுக்கு பெரும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது

சேலைன், ரெக்ரோஸ், மற்

இதனால் இவ் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வரும் நோயாளர்களுக்கு இம் மருந்துப் பொருள்களை வழங்க முடியாத நிலை உருவாகி உள்ளது பெரும்பாலான நோயாளர்கள் மேற்படி மருந்

## முஸ்லிம்கள் படுகொலைக்கு அரசாங்கமே பொறுப்பு

– அஷ்ரப் குற்றச்சாட்டு

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் படுகொலையாவது தொடர்வதற்கு இந்த அரசே காரணம் என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் கூறியுள்ளார்.

சாய்ந்தமருது பகுதியில் நேற்று முன் தினம் நடை

பெற்ற குண்டு வெடிப்பின்பின்னர் அம்பாறை மாவட்டத்

## திருமலை அகதிமுகாம் குடிசைகள் தீக்கிரை

(திருக்கோணமலை)

திருகோணமலையின் முத்து நகர் பகுதியில் முஸ்லிம் அகதிகள் தங்கியிருந்த முகாமொன்று தீப்பிடித்து எரிந்து நாசமாகியது. கடந்த ஞாயிறு

குடிசைகள் எரிந்து சாம்பலாகின.

இச் சம்பவம் ஒரு விபத்து எனத் தெரிகிறது எனினும் எவரும் உயிரிழக்கவோ காயங்களுக்கு இலக்காகவோ

காப்பு மருந்துப் பொருள்களுக்கு பெரும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது

சேலைன், ரெக்ரோஸ், மற்றும் பல்வேறு வகையான நோய்த்தடுப்பு ஊசி மருந்துகள் ஆகியவையே பற்றாக்குறை நிலையில் உள்ளது

மருந்துப் பொருள்களை வழங்க முடியாத நிலை உருவாகி உள்ளது பெரும்பாலான நோயாளர்கள் மேற்படி மருந்துப் பொருள்களை வெளிச் சந்தையில் அதிக விலை கொடுத்து பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. (பா)

## பணம் அனுப்பினால் மண்ணெய் கிடைக்குமாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்திற்கு மண்ணெய் அனுப்பி வைப்பதற்கு அத்தியாவசிய சேவைகள்ஆணையாளர்நடவடிக்கை எடுத்திருக்கிறார்.

யாழ் மாவட்டத்திற்கு ஏற்கனவே உணவுப்பொருள்களை அனுப்பியதால் தனக்கு வர வேண்டிய வரவுப்பணத்தை யாழ். அரச அதிபர் அனுப்பி வைக்கும் பட்சத்தில் யாழ் மாவட்டத்திற்குத் தேவையான மண்ணெயை அனுப்பி வைக்க முடியும் என்று அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அரச அதிபருக்கு அறிவித்துள்ளார்.

## மட்டுப்படுத்தப்பட்ட அளவில் லொறிகளுக்கு அனுமதி

(வவுனியா)

வடபகுதிக்கு உணவுப் பொருள்களை ஏற்றி வரும் லொறிகள் மற்றும் உழவு இயந்திரங்களை கடும் சோதனைகளுக்குப் பின்னர் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையில் சிறிலங்கா இராணுவத்தினர் அனுமதிக்கின்றனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது

வவுனியாவில்இருந்து யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு போன்ற இடங்களுக்கு உணவு ஏற்றிச் செல்வதற்கு தினமும் பத்து தனியார் லொறிகளுக்கு மட்டுமே இராணுவம அனுமதி வழங்குகின்றது

ஈரற்பெரியகுளம் சோதனைச் சாவடியில் இத்தகைய கட்டுப்பாடுநடைமுறைப்படுத்தப் படுகிறது வடபகுதியில் இருந்துஉணவுப்பொருள்களை ஏற்றிச் செல்வதற்காக வவுனியவுக்கு வந்த நூற்றுக்கு மேற்பட்ட லொறிகளும் இருநூறுக்கு மேற்பட்ட உழவு இயந்திரங்களும் ஐம்பதுக்கு மேறபட்ட இரு சக்கர உழவு இயந்திரங்களும வவுனியாவில் பல நாட்களாக காத்துக்கிடக்கின்றன.

இதேவேளை உணவுப் பொருள்களை ஏற்றிச் செல்வதற்காக வடபகுதியிலிருந்து வவுனியாவுக்கு வரும உழவு இயந்திரங்களுக்கு புதிய டயர்களையோ உதிரிப பாகங்களையோ மாற்றக்கூடாது எனறும் இரா

[4 ஆம் பக்கம் பார்க்க]

## கல்லடிப் பகுதியில் ஆயுதபாணிகள் கொள்ளை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கல்லடியில் இராணுவச் சீருடை அணிந்த ஆயுதம் தாங்கிய கோஷ்டி ஒன்று அதிகாலைவேளை வீடு ஒனறிற்குள் புகுந்து பல ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைக் கொள்ளை அடித்துச் சென்றுள்ளது.

கடந்த 24 ஆம் திகதி அதிகாலை இரண்டு மணியளவில் புதுமுகத்துவாரத்தைச் சேர்ந்த நகுணரத்தினம் என்பவரின்வீட்டிலேயேஇக்கொள்ளை இடமபெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் படுகொலையாவது தொடர்வதற்கு இந்த அரசே காரணம் என்று முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் கூறியுள்ளார்.

சாய்ந்தமருது பகுதியில் நேற்று முன்தினம் நடை

## - அஷ்ரப் குற்றச்சாட்டு

பெற்ற குண்டு வெடிப்பின்பின்னர் அம்பாறை மாவட்டத்திற்கான சுற்றுப் பயணத்தை மேற்கொண்ட அஷ்ரப் செய்தியாளர்களிடம் மேற்படி கருத்தை தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் முஸ்லிம் கிராமங்களைப் பாதுகாப்பதற்கு அரசு தனி முஸ்லிம் இராணுவம் ஒன்றை அமைக்க வேண்டும் என்ற தனது திட்டம் உதாசீனப் படுத்தப்பட்டு வருவதாலேயே

( 4 ஆம் பக்கம் பார்க்க )

## அம்பாறைப் பகுதியில் நேற்றுக் கதவடைப்பு

(மட்டக்களப்பு)

அரசு தமக்குத் தகுந்த பாதுகாப்பு வழங்கவில்லை என அம்பாறை - மட்டக்களப்பு மாவட்டங்களில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாகவுள்ள பகுதிகளில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. வர்த்தக நிலையங்களும், அரச காரியாலயங்களும மூடிக்கிடந்தன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

# அரசியலமைப்பு திருத்தாவிடில் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது

## - சானக அமரதுங்க

(கொழும்பு)

தற்போதைய அரசியலமைப்பின் கீழ் இனப் பிரச்சினைக்கான தீர்வொன்றைக் காண்பது இயலாததாகும். எனவே இனப் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டுமானால் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டியது அவசியமானதாகும். இதற்காக புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும் என்று லிபரல் கட்சியின் தலைவரான டாக்டர் சானக அமரதுங்க கூறியுள்ளார்.

தாராள ஜனநாயகத்திற்கான பேரவையால் ஹோட்டல் லங்கா ஓ ரேயில் நடத்தப்பட்ட ''சமஷ்டி, அதிகாரப் பரவலாக்கல், மாகாண சபைகள், ஒரு மீள் பார்வை'' என்னும் தலைப்பிலான கருத்தரங்கில் பேசிய அவர் மேலும் கூறுகையில், இலங்கையில அதிகாரப் பரவலாக்கலுக்கு சமஷ்டி ஒரு அவசியமான நிபந்தனை என்றும் குறிப்பிட்டார். அத்துடன் இனப்பிரச்சினைக்கு மட்டுமன்றி கடந்த பதினைந்து, இருபது வருட காலமாக இருக்கும் பல்வேறு பிரச்சினை

[4 ஆம் பக்கம் பார்க்க]

## சமஷ்டி அமைப்பின் மூலம் பிரச்சினையை தீர்க்கலாம்

-ராம்

[சென்னை]

இனப்பிரச்சினைக்கு சமஷ்டி அமைப்பின் மூலமே தீர்வு காணலாம் என புரொன்ட் லைன் பத்திரிகையின் ஆசிரியர் திரு. என். ராம் குறிப்பிட்டுள்ளார்.

சமஷ்டி முறை என்ன பெயரில் அழைக்கப்பட்டாலும் இவ்வாறான முறையொன்றே இனப் பிரச்சினைக்குத் தீர்வாகும் மேலும் சிங்களவர்கள் முதலில் சிங்களம் மட்டும் என்ற பொறியில் இருந்து விடுபடுவது அவசியம் என்றும் அவர் தெரிவித்தார்.

# ஐம்பது சதவீத தோட்டங்கள் இந்தியர் வசமாகியுள்ளது

## - டி. லிவேரா கவலை

(கொழும்பு)

ஐம்பது சதவீதமான தோட்டங்கள் இப்பொழுது இந்திய நிறுவனங்களால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. எமக்குப் போட்டியாகவுள்ள இந்தியா எமது தோட்டங்களில் ஐம்பது சதவீதமானவற்றில் நன்றாகக் காலூன்றி விட்டது என்று டி. லிவேரா கூறினார்.

தோட்டத்துரைமார் சங்கத் தலைவர் டி. லிவேரா மேற்படி சங்க வருடாந்தக் கூட்டத்தில் பேசும்போது இவ்வாறு கூறினார். தோட்டத் தொழில் துறை அமைச்சர் ரூபா கருணாதிலக்க பிரதம விருந்தினராக கலந்து கொண்

[4 ஆம் பக்கம் பார்க்க]

திருகோணமலையின் முத்து நகர் பகுதியில் முஸ்லிம் அகதிகள் தங்கியிருந்த முகாமொன்று தீப்பிடித்து எரிந்து நாசமாகியது. கடந்த ஞாயிறு நண்பகலில் இடம் பெற்ற தீ விபத்தில் முப்பத்தியாறு

கின.

இச் சம்பவம் ஒரு விபத்து எனத் தெரிகிறது எனினும் எவரும் உயிரிழக்கவோ காயங்களுக்கு இலக்காகவோ இல்லை எனவும் மேலும் கூறப்படுகிறது

## 50 கலிபர் தாக்குதலும், எறிகணை வீச்சும்

வலிகாமப் பகுதிக் கடற்கரைப் பகுதிகளில் நிலை கொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று பரவலாக கலிபர் தாக்குதல்களையும் எறிகணைத் தாக்குதல்களையும் மக்கள் குடியிருப்புகளை நோக்கி மேற்கொண்டனர்.

நேற்றுக் காலை மண்டைதீவு பகுதி இராணுவம் தொடர்ச்சியாக யாழ்நகரை நோக்கி கலிபர் தாக்குதல்களை மேற்கொண்டன

நண்பகல் 1. 30 மணியளவில் மாதகல் பகுதியை ஆக்கிரமித்துள்ள இராணுவம் பண்டத்தரிப்பு, சில்லாலை பகுதிகளை நோக்கி எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டது. பத்திற்கு மேற்பட்ட எறிகணைகள் இராணுவத்தால் ஏவப்பட்டன. இதே வேளை தொடர்ச்சியான துப்பாக்கி வேட்டுக்களையும் தீர்த்தனர். இதனால் வீடுகளில் தமது உடைமைகளை எடுக்கச் சென்ற பலர் பயத்தினால் திரும்பிச் சென்றதை அவதானிக்க முடிந்தது.

இரவு 9 30 மணியளவில் காரைநகர் கடற்பரப்பிலிருந்து பீரங்கிப் படகுகளிலிருந்து குண்டுத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன. இவை திருவடிநிழல் பகுதியில்வீழ்ந்து வெடித்தன. (ச)

## சாய்ந்தமருதுவிற்கு அமைச்சர்கள் விஜயம்

சாய்ந்தமருது குண்டுவெடிப்பு சம்பவம் நிகழ்ந்த இடத்திறகு வர்த்தக வாணிபத் துறை அமைச்சர் ஜனாப் ஏ.ஆர் மன்சூர் உட்படநான்கு அமைச்சர்கள் விசேட உலங்கு வானூர்தி மூலம் சென்றனர் என தெரிய வருகிறது. ஜனாதிபதி பிரேமதாசாவின் பணிப்பின் பெயரிலேயே இவர்கள் சென்றார்கள் என அறியப்படுகிறது.

தியாகி திலீபன் நினைவு

## தடகளப் போட்டிகள் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாண மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் நடத்தப்படும் தியாகி திலீபன் நினைவு தடகளப் போட்டிகளின் நிகழ்வுகள் இன்றுஆரம்பமாகின்றன. இன்றுபிற்பகல் இரண்டு முப்பதுமணிக்கு, யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளம் பரிதி தேசியக்கொடியை ஏற்றி இந் நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைக்க உள்ளார்.

குளம் பெருக்கி

வளம் காண்போம்

## வரி விளம்பரம்


### கடிகாரமா? ரேடியோவா?

உங்கள் கடிகாரங்கள் ரேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள் சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு டில்கா வாச்வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (பழைய விகாரை முன்பாக) யாழ்ப்பாணம். (சி-4964)

### எழுதுநர் பரீட்சை

எழுதுநர் போட்டிப் பரீட்சைத் தகுதித் தேர்வுக்கான மாதிரிப் பயிற்சி நூல் பொது விவேகப்பயிற்சிகள் 10-09-92 இல் வெளிவருகின்றது. ஆக்கம்; க. குணராசா எல்லாப் பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (3087)

### விற்பனைக்கு

இறைச்சிக்கோழி மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு, தொடர்பு: 698/15 தலையாழி (வயிரவர் கோவிலடி) சபாபதி வீதி, யாழ்ப்பாணம். (3116)

HONDA 1.5 Kv ஜெனறேற்றர். மண்ணெண்ணெய் FRIDGE, அலுமினிய ஷோகேஸ் வேறும் பல பொருள்கள் ஜெயா ஏலவிற்பனைப் பகுதி டாஸ் கொம்ப்ளெக்ஸ், 163, பிரதான வீதி, யாழ்ப்பாணம். (3118)

### ENGLISH ASSISTANT TEACHERS

போட்டிப் பரீட்சைக்கான துரித பயிற்சி வகுப்புகள் ஆரம்பம் 05-09-92 10-30மணி Letures byMr.K.Sabanayagam குறைந்த கட்டணம் School of Business Administration, 16, 3rd Cross Street, Jaffna. (சி/4990)


# யாழ். பல்கலைக்கழகத்தில் 12-வது பட்டமளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகப் பன்னிரண்டாவது பட்டமளிப்பு விழா வரும் 5ஆம் திகதி சனிக்கிழமை கைலாசபதி கலை அரங்கில் இரு அமர்வுகளில் நடைபெறவுள்ளது.

காலை 9மணிக்கு ஆரம்பமாகும் பட்டமளிப்பு விழாவிற்குயாழ் பல்கலைக்கழக துணைவேந்தர்பேராசிரியர் அ. துரைராசா தலைமை தாங்குவார். யாழ். பல்கலைக் கழக வேந்தர் பேராசிரியர் த நடராசா பட்டமளிப்பு விழாவில் வில்கலந்துகொள்ளமாட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பட்டமளிப்பு விழாவில் முதல் நிலைப் பட்டங்களுடன், கலாநிதி, விஞ்ஞான முதுமாணி, முதுகலைமாணி, முதுமெய்யியல் மாணி, பட்டப்பின் கல்வி டிப்புளோமா முதலிய பட்டங்கள் வழங்கப்படவுள்ளன.

பட்டமளிப்பு விழாவின் முதலாவது அமர்வின்போது கலைமாணி, சித்தமருத்துவ சத்திர சிகிச்சை மாணி, இசைக்கலை மாணிப் பட்டமளிப்பு இடம்பெறும் இரண்டாவது அமர்வில் மருததுவ மாணி, சத்திர சிகிச்சை மாணி, விஞ்ஞான மாணி, வர்த்தக மாணி பட்டமளிப்பு இடம் பெறும்.

இடம் பெயர்ந்து பட்டமளிப்பு விழாவில் சமுகமளிக்க முடியாத நிலையில் உள்ள மாணவர்களுக்கும் பட்டமளிக்கப்படவுள்ளது மூன்று பேர் கலாநிதிப்பட்டம் பெற விருப்பது குறிப்பிடத்தக்கது.

செய்தியாளரிடம் பேசிய யாழ் பல்கலைக் கழகத்துணைவேந்தர் அ துரைராசா தற்போதுள்ள நாட்டுச்சூழ்நிலையில் அனைத்தும் மாமூல்படி நடக்கவேண்டும். பின்னுக்குத் தள்ளிப் போட்டால் என்ன நடக்கும் என்பது நிச்சயமில்லை. போனநாள் திரும்பி வராது என்றார்.

பட்டமளிப்பு விழாவைத் தொடர்ந்தால் போல் இராமநாதன் நுண்கலைப் பிரிவினரின் கலை நிகழ்ச்சியும் 7, 8 ஆம் திகதிகளில் முறையே லீலாவதி இராமநாதன், சேர் பொன்னம்பலம்இராமநாதன் நினைவுப் பேருரைகளும் நடைபெறவுள்ளன.

## மக்கள்வங்கி வெற்றிடங்கள் நிரப்பப்படமாட்டாது

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய மக்கள்வங்கியில் உள்ள எழுதுவினைஞர்களுக்கானவெற்றிடங்கள்நிரப்பப்படமாட்டாது.

மேற்படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு மக்கள் வங்கித் தலைமை அலுவலகம் மறுப்புத் தெரிவித்திருப்பதைத் தொடர்ந்து இந்த முடிவுமேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

அண்மையில் நடைபெற்ற போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களைக் கொண்டு வடபகுதி அரச வங்கிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது இதன்படி மக்கள்வங்கி தவிர்ந்த ஏனைய வங்கிகளிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதிகளவு வெற்றிடங்களைக் கொண்ட மக்கள்வங்கிக்கு எழுதுவினைஞர்களை நியமிக்கவேண்டாம் என்று இதன் தலைமையகம் விடுத்த வேண்டுகோளைத்தொடர்ந்து மேற்படி வெற்றிடங்கள் நிரப்பப்படவில்லை. (க)

## கூட்டம்

(வடமராட்சி கிழக்கு)

மருதங்கேணி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 5-ம் திகதி சனிக்கிழமை காலை 9 30 மணிக்கு அம்பன் அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் தலைவர் திரு. சி. பொன்னம்பலத்தின் தலைமையில் நடைபெறவுள்ள வருடாந்த பொதுக் கூட்டத்தில் சிறப்பு விருந்தினர்களாக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்கள் திரு. செ. லிங்கநாதன், திரு, எஸ். ஜெயபாலன், திரு மா. கனகசபை ஆகியோர் கலந்து கொள்வார்கள். [36]

## செல்வச் சந்நிதி மகோற்சவம்

(பருத்தித்துறை)

சரித்திரப்பிரசித்தி பெற்ற தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகனின் தேர்த்திருவிழா இம்மாதம் 11-ம் திகதியும், 12-ம் திகதி தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன.

இவ் ஆலய வருடாந்த மகோற்சவம் கடந்த 28-ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இவ் ஆலயத்தில் பருத்தித்துறை பிரதேசச் செயலருக்கான அலுவலகம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது. இவ் அலுவலகத்தில் தினமும் 2 கிராம சேவை உத்தியோகத்தர்கள் கடமையிலீடுபட்டு வருகின்றனர் சகல நடவடிக்கைகளையும் பருத்தித்துறைப் பிரதேச செயலர் திரு ச முருகேசபிள்ளை கண்காணித்து வருகின்றார். (25)

## ஆங்கில ஆசிரியர் எழுத்துப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களுக்கான நேர்முகப்பரீட்சைக்கு தோற்றியோருக்கான எழுத்துப்பரீட்சை எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது

இவ்வெழுத்துமூலப்பரீட்சை யாழ்ப்பாணம், வேலணை, மருதனார்மடக் கோட்டங்களில் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றியோருக்கு யாழ் இந்துக் கல்லூரியிலும், பருத்தித்துறை, சாவகச்சேரி, பண்டத்தரிப்பு கோட்டங்களில் நேர்முக பரீட்சைக்குத் தோற்றியோருக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

இப்பரீட்சார்த்திகள் அனைவரும் தமக்குரிய சுட்டெண்களை யாழ் இந்துக்கல்லூரியிலும், இந்துமகளிர் கல்லூரியிலும் பெற்றுக்கொள்ளலாம் எனவும் பரீட்சார்த்திகள் தமக்குத் தேவையான எழுதுகருவிகள், எழுதும் தாள்களை தாமே கொண்டுவருதல் வேண்டும் எனவும் பிரதேசக் கல்விப்பணிப்பாளர் துரை தியாகராஜா அறிவித்துள்ளார்.

## நெதர்லாந்து புலமைப் பரிசு; தமிழர் புறக்கணிப்பு

(கொழும்பு)

நெதர்லாந்து அரசின் தொழில் நுட்ப திட்டத்தின் கீழ் நில அளவையாளர் நாயகம் திணைக்களத்தில் கடமையாற்றும் வரைபட வரைவாளர் ஒருவருக்கென வழங்கப்பட்ட புலமைப்பரிசிலில் அனைத்து தகுதிகளும் வாய்ந்த தமிழ் உத்தியோகத்தர் ஒருவர் புறக்கணிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவரிலும் விட கனிஷ்ட தரத்தில் உள்ள உத்தியோகத்தர் மேற்படி புலமைப் பரிசிலுக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார் வேண்டுமென்றே இத்தகைய பாரபட்சம் காட்டப்படுகிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது


**Dr. அல்போன்சஸ் அத்தனாசியார்**

பண்டத்தரிப்பு

எனது சிகிச்சை நிலையம் தற்பொழுது இல 3,கண்டி வீதி, வஸ்தியன் சந்தி, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் இயங்குகிறது குழந்தைகள், முதியோர், மனநோயுற்றோர், மகளிர் சம்பந்தமான வியாதிகளுள்ளோர், கெற்பகாலப் பரிசோதனை வேண்டியோர் மேலும் பல வியாதிகளால் துன்புறுவோர் இங்கு சிகிச்சை பெற வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இத்துடன் பல பல வியாதிகளுக்கான மருத்தெண்ணெய் வகைகளையும் பெற்றுக் கொள்ள ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

அன்புடன்,
வைத்திய கலாநிதி,
அல்போன்சஸ் அத்தானசியார்

(3119)


## பல்கலை. தெரிவானோர் ஆங்கில வகுப்புகள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கல்வி ஆண்டு 1990 / 91 இற்கான பல்கலைக்கழக கல்விக்குத்தெரிவானோருக்கான ஆங்கில வகுப்புகள் நேற்று முன்தினம் முதல் ஆரம்பமாகியுள்ளன.

இவர்களுக்கான மேற்படி வகுப்புகள் யாழ். இந்துக் கல்லூரி, யாழ்.இந்து மகளிர் கல்லூரி, மானிப்பாய் இந்துக் கல்லூரி, மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி, பருத்தித்துறைஹாட்லிக்கல்லூரி, சாவகச்சேரி றிபேக் கல்லூரிகளில் நடைபெறுகின்றன.

இதுவரை பதிவு செய்த மாணவர்களுடன் புதிய வெட்டுப் புள்ளி அடிப்படையில் பல்கலைக் கழகங்களில் ஏதோவொரு கற்கை நெறியில் கற்க அனுமதிக்கப்படுவோர் என்று கருதுபவர்களும் இதுவரை பதிவு செய்யாத தெரிவு செய்யப்பட்டமாணவர்களும் தமது வசிப்பிடங்கட்கு அருகிலுள்ள மேற்குறிப்பிட்ட பாடசாலைகளில் தமது பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம் என பிரதிக் கல்விப்பணிப்பாளர் துரை தியாகராஜா அறிவித்துள்ளார்.

## முஸ்லிம்லீக் ஆராயும்

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்குத் தீர்வு காண சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசும் தமிழ்க் குழுக்களும் முன்வைத்துள்ள யோசனைகளை ஆராய அகில இலங்கை முஸ்லிம் லீக்கின் செயற்குழு வரும் 8ஆம் திகதி கூடவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## கைலாசபதி கலையரங்கில் "சத்தியவான் சவித்திரி"

(சுன்னாகம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெறவுள்ள பட்டமளிப்பு விழாவை ஒட்டி மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி மாணவிகள் அளிக்கும் "சத்தியவான் சாவித்திரி" என்ற நாட்டிய நாடகம் எதிர்வரும் 6 ஆம் திகதி மாலை 4 30 மணியளவில் யாழ். கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளதுமேற்படி நாட்டிய நாடகம் தமிழ்த்தினப் போட்டியில் மாவட்ட அளவில் முதலிடம் பெற்றது குறிப்பிடத்தக்கது. (09), (11)

## 67 யாழ். இந்துமாணவருக்கு பல்கலைக்கழக அனுமதி

(யாழ்ப்பாணம்)

1990 ஆகஸ்ட் (91ம் ஆண்டில் நடைபெற்ற விசேட பரீட்சை) உயர்தரப் பரீட்சை வெட்டுப் புள்ளி அடிப்படையில் யாழ் இந்துக்கல்லூரியில் இருந்து 67 பேர் பல்கலைக் கழகத்திற் தெரிவு செய்யப்பட உள்ளனர்.

ஒவ்வொரு துறைக்கும் தெரிவு செய்யப்பட உள்ள மாணவர்களின் எண்ணிக்கை பின்வருமாறு; பொறியியல் பகுதிக்கு 20 பேரும் மருத்துவப் பகுதிக்கு 11 பேரும் பௌதிக விஞ்ஞானப்பகுதிக்கு 26 பேரும், மிருக வைத்தியப் பகுதிக்கு 03 பேரும், உயிரியல் விஞ்ஞானப் பகுதிக்கு 02 பேரும், விவசாயப்பகுதிக்கு 03 பேரும், முகாமைத்துவப் பகுதிக்கு 02 பேரும் தெரிவு செய்யபடவுள்ளனர். (பா)


## நினைவு கூருகின்றோம்... 1992 - 09 - 03

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டக்களப்பில் சிறிலங்கா அதிரடிப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய -

**டயஸ்** (கிங்ஸ்லி யேசு ராஜ்குமார் - வலையிறவு. மட்டக்களப்பு)

இதே சுற்றிவளைப்பின்போது விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**வில்லியம் / நிராஜ்** (அ சாத்வீகன், புன்னைச் சோலை, மட்டக்களப்பு)

தமிழீழக் கடற்பரப்பில் (மாதகலுக்கு வடக்கே) சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**லெப். சுதர்சன்** (வைத்திலிங்கம் ஜீவானந்தன் - புன்னாலைக்கட்டுவன் தெற்கு - யாழ்ப்பாணம்)


### அதிபர் தரம் 1, 2, 3 இல் உள்ளவருக்கான

## தடைதாண்டல் பரீட்சைக்கே விண்ணப்பம் கோரப்பட்டது

(யாழ்ப்பாணம்)

அதிபர் தரம் 1, 2, 3 இல் உள்ளவர்களுக்கான தடை... பொதுச்செயலாளர் தெரிவித்துள்ளார். அந்த விளம்பரம் ...

விக்கப்படுகிறது. நாட்டிய நாடகம் எதிர்வரும் (09), (11)


## இன்று மங்களகரமான திறப்பு விழா!

இன்று 03-09-1992 வியாழக்கிழமை காலை 9-40 க்கும் 10-52 க்கும் இடையில் வரும் சுபவேளையில்

## லாவண்யா பல், மூக்குக்கண்ணாடி அகம்

(வி. ரி. அன் சன்ஸ்)

(பல் கட்டுதலும், கண் பரிசோதித்து கண்ணாடி வழங்குதலும்)

**175, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.**

(பஸ் நிலையம் முன்பாக)

## திறந்து வைக்கப்படவுள்ளது

நண்பர்கள், அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்.

பணிவன்புடன் அழைக்கும்
**றெஜி சொலமன்**

கிளைகள்:
302, பணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (எழிலகம் முன்பாக)
கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். (இலங்கை வங்கி அருகாமையில்)

(3117)



## A/L 93, 94 புதிய பிரிவுகள்

## ஆரம்பம்: 5-9-92 (சனி)

| நேரம் | பாடம் | ஆசிரியர் | அலகு |
|---|---|---|---|
| சனி/ஞாயிறு | | | |
| 7.45 - 9.00 | பௌதிகவியல் | திரு. வர்ணம் | ஒளியியல் |
| 10.45 - 11.45 | பௌதிகவியல் | திரு. பத்மநாதன் | பொறியியல் |
| 1.15 - 2.15 | விலங்கியல் | திரு நாகநாதன் | வன்கூட்டுத்தொகுதி |
| 2.15 - 3.15 | தாவரவியல் | திரு. ஐங்கரநேசன் | தாவரப்பாகுபாட்டியல் |
| 3.15 - 4.15 | தாவரவியல் | திரு. ஐங்கரநேசன் | நுண்ணுயிரியல் |
| 4.15 - 5.00 | தாவரவியல் | திரு. ஐங்கரநேசன் | வினா-விடை வகுப்பு |
| 5.00 : 5.45 | இரசாயனவியல் | திரு. செல்வா | பொது இர்சாயனம் |
| 5.45 - 6.30 | விலங்கியல் | திரு. நாகநாதன் | உணவுக்கால்வாய்த் தொகுதி |

## யூனிவேர்சல்

(சி-4988) **கந்தர்மடம் - யாழ்ப்பாணம்**


(யாழ்ப்பாணம்)

அதிபர் தரம் 1, 2, 3 இல் உள்ளவர்களுக்கான தடை தாண்டல் பரீட்சைக்கு மாத்திரமே விண்ணப்பங்கள் அரச வர்த்தமானியில் கோரப்பட்டுள்ளன என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் தெரிவித்துள்ளார். அந்த விளம்பரம் அதிபர் வெற்றிடங்களை நிரப்புவதற்கல்ல என்றும் பொதுச் செயலாளரின் பத்திரிகைச் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கிறது.

## 6-ம் ஆண்டு நினைவஞ்சலி



தாயின் மடியில்
04 . 07 . 1964

தாயக மண்ணில்
03 . 09 . 1986

## வீரவேங்கை குயிலன்

**(இராசரத்தினம் இரவீந்திரன்)**

வீட்டின் குலமகனே!
விரும்பும் நன் மகனே!
போற்றும் புகழோடு வாழ்வாய் என்றிருந்தோம்.
ஆற்ற யார் உள்ளார்?
ஆறுதல்கள் எங்கு காண்போம்?

கண் கலங்க வைத்தாயே.
மண் வாழ்வில் முடிக்க.
இத்தனை அவசரம் ஏன்?

மரணம் உன்னைத் தேடவில்லை - நீ
மரணத்தை தேடி அணைத்துக் கொண்டவன்
மாவீரர் குடும்பமென நாம் மகிமை பெறவைத்து
சாவினை அணைத்த சாதனையாளன்.

வரலாறு எழுதும் தமிழ்த் தலைவன்
பிரபாவின் பாசறையில் பயின்றவன்
ஓடி வந்தாய் தேசம் நோக்கி
துடித்தாய் பகைவர் பிடியில் - அதனால்
முடித்தாய் வாழ்வை விடுதலைக்காக.

அல்வாய்,
பருத்தித்துறை.

பெற்றோர், உறவினர்
நண்பர்கள்.

(சி-4982)

வீரச்சாவெய்திய -

**லெப். சுதர்சன்** (வைத்திலிங்கம் ஜீவானந்தன் - புன்னாலைக்கட்டுவன் தெற்கு - யாழ்ப்பாணம்)

**குயிலன்** (இராசரத்தினம் ரவீந்திரன் - 'இராசவில்லா' நாவலடி, அல்வாய் - யாழ்ப்பாணம்)

**தீசன்** (ஜெகதீஸ்வரன்)

1988 ஆம் ஆண்டு கிளிநொச்சி - வட்டக்கச்சிப் பகுதியில் இந்தியப் படையினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

**லெப். சீலன்** (கணேசபிள்ளை நாகேந்திரன் - ஓட்டுமடம், யாழ்ப்பாணம்)

1989 ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் - அளவெட்டிப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் வீரச்சாவெய்திய -

**வித்தியா** (வினாயகமூர்த்தி வித்தியாதரன் - தாசுவன் தோட்டம், அளவெட்டி - யாழ்ப்பாணம்)

மன்னாரில் தேசவிரோத சக்திகளினால் சுட்டுக் கொல்லப்பட்ட பள்ளிமுனையைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

யாழ்ப்பாணத்தில் இந்தியப் படையினரால் படுகொலை செய்யப்பட்ட வல்வெட்டித்துறை தெணியம்பை ஒழுங்கையைச் சேர்ந்த தமிழ் மூதாட்டி.

1990 ஆம் ஆண்டு யாழ் கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவததினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலின்போது விழுப்புண் அடைந்திருந்து வீரச்சாவெய்திய -

**2ம் லெப். பெனா** (கிறிஸ்தோப்பர் கிளிற்றன் நிர்மலன் – இல 31, பெரியபண்டிவிரிச்சான், மன்னார்)

இதே பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**பாபு** (ஐயப்பெருமாள் ஜெயக்குமார் - ஊறணி, காங்கேசன்துறை, யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட செங்கலடி, கொடுவாமடுவைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

தமிழீழக் கடற்பரப்பில் (பருத்தித்துறை) தமிழகம் நோக்கிச் சென்று கொண்டிருந்த இடம்பெயர்ந்தோர் படகின் மீது சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 8 தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினர் மற்றும் தேசவிரோத சக்திகள் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**லெப். லக்ஸ்மன்** (தியாகராசா வரதராஜன் - ஆரையம்பதி - 1, மட்டக்களப்பு)

மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

**ஜமால்** (பவித்துரை பாலசிங்கம் - பன்குடாவெளி, மட்டக்களப்பு)

**ஜேம்ஸ்** (மட்டக்களப்பு)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

## தமிழீழ விடுதலைப் புலிகள்

(சி/4987)

### சிந்தனைக்கு

மனிதர் தூக்கிலிடப்படுவது குதிரைகளைத் திருடியதற்காக அல்ல, குதிரைகளைத் திருடாமல் இருப்பதற்காக.

— ஹேரஃ பாக்ஸ் பிரபு


ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 03-09-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் - 05


## தேர்தல் சட்டங்கள் தேவையா?

நேற்றுமுன்தினம் ஜனாதிபதித் தேர்தல் ஆட்சேப மனு வழக்கை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்து தீர்ப்பு வழங்கியுள்ளது. இவ்வழக்கை விசாரணை செய்த ஐந்து நீதிபதிகளும் ஏகமனதாக இத்தீர்ப்பை வழங்கினர்,

தேர்தல் விதிகளுக்கு மாறாக, அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் இத்தேர்தல் நடந்ததாக மனுதாரரான எதிர்க் கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா குற்றம் சாட்டியிருந்தார். ஆனால் தீர்ப்பு வழங்கிய நீதிபதிகள் சிறிமாவோ பண்டாரநாயக்கா தமது குற்றச்சாட்டை நிரூபிக்கத் தவறிவிட்டார் எனத் தமது தீர்ப்பில் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை ஜனாதிபதித் தேர்தல் ஆட்சேப மனு மீதான வழக்கின் தீர்ப்பு பெரும்பாலும் எதிர்பார்க்கப்பட்டது போன்றே வெளிவந்தது. அதே போன்று எதிர்க்கட்சியினரும் தீர்ப்புத் தொடர்பாக தமது ஆட்சேபனையைத் தெரிவித்துள்ளனர். இத்தீர்ப்பு குறித்து கருத்து வெளியிட்ட சிறிமாவோ பண்டாரநாயக்கா "எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். எமக்கு நீதி வழங்கப்பட மாட்டாது என நன்றாகத் தெரிந்தமையினாலேயே தீர்ப்பு வழங்கப்படும்போது நான் நீதிமன்றத்திற்குச் சமுகம் அளிக்கவில்லை" எனத் தெரிவித்தார்,

நீதிபதிகள் குறிப்பிட்டது போன்று தேர்தல் விதிகளுக்கு மாறாக அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் இடம்பெற்றதான தனது குற்றச்சாட்டை சிறிமாவோ பண்டார நாயக்கா நிரூபிக்கத் தவறிவிட்டார் என்பது சாட்சிகளின் அடிப்படையிலும், சிறிமாவோ சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையிலும் சரியாகக் கூட இருக்கலாம். ஆனால் மக்கள் மத்தியில் இன்று எழும் பிரதானமான கேள்வி 1988 இல் இருந்த ஓர் அரசியல் சூழ்நிலையில் ஓர் தேர்தல் நடத்தப்படலாமா? அவ்வாறு நடத்தப்படுமானால் ஓர் "ஜனநாயக நாட்டில்" மக்களுக்குரிய உயர்ந்த உரிமையான வாக்குரிமையை அவர்கள் சுதந்திரமாகவும் பாதுகாப்புடனும் பிரயோகிக்க முடியுமா? என்பதேயாகும்.

1981 இல் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலே இலங்கையின் தேர்தல் வரலாற்றில் முதல் முதலில் மோசமான சூழ்நிலையில் அதாவது தேர்தல் வரன்முறைகளுக்கு மாறாக இடம்பெற்ற தேர்தலாகும். இத்தேர்தல் ஓர் குழப்ப

# தனித்துவமான ஒரு சமூகமாக 'கியூபெக்'; கனடிய அரசியல் அமைப்பில் அங்கீகாரம்

## 7 லட். 50 ஆயிரம் சுதேசிகளுக்கு சுயாட்சி பிரச்சினையைதீர்க்கதலைவர்கள்உடன்பாடு

கனடாவை ஐக்கியப்பட்ட ஒரு நாடாக தொடர்ந்தும் பேணிப் பாதுகாக்கும் நோக்குடன் பாரிய அரசியலமைப்பு மாற்றங்களை செய்வதற்கு பிரெஞ்சு மொழி பேசும் கியூபெக் மாகாணத்துடன் கனடிய அரசியல் தலைவர்கள் உடன்பாடொன்றை கண்டிருக்கிறார்கள்.

இந்த உடன்படிக்கை 125 வருடகால கனடிய சம்மேளனத்தை பெரும் மாற்றங்களுக்குள்ளாக்கும் கூடுதல் சுயாட்சிக்கான கியூபெக்கின் கோரிக்கையை பூர்த்திசெய்யும் முயற்சியாக பாராளுமன்றம் மறுசீரமைக்கப்படவிருக்கிறது அத்துடன் பத்து மாகாணங்களுடனும் சமஷ்டி அதிகாரங்கள் பகிர்ந்து கொள்ளப்படும்.

முன்னொரு போதுமில்லாத வகையிலான பலாபலன்களை கியூபெக் பெற்றிருக்கிறது. ''கனடாவை மேலும் பலப்படுத்தக் கூடிய நீதியான- கௌரவமான'' இணக்கப்பாடொன்றுக்கு நாம் வந்திருக்கின்றோம் என்றுபத்திரிகையாளர் மாநாட்டில் கனடிய பிரதமர் பிரையன் மல்ரோனி கூறினார்.

கனடாவுக்குள் கியூபெக் தொடர்ந்தும் இருக்குமா என்பது தொடர்பாக பல் வருடகாலமாக நிலவிவந்த நிச்சயமற்ற தன்மையை இந்தஉடன்பாடு முடிவுக்குக்கொண்டு வரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.உடன்பாடு பாராளுமன்றத்தினதும்மாகாணசட்டசபைகளினதும்அங்கீகாரத்தை பெற்றாக வேண்டும்.

நாடுதழுவிய ரீதியில் ஆறு மாதகாலமாக நடத்தப்பட்ட ஆலோசனை கலப்புகளின்இறுதியில் காணப்பட்டிருக்கும் சரித்திர முக்கியத்துவ உடன்பாடு, கனடாவின் ஏழு இலட்சத்து ஐம்பதினாயிரம் சுதேசிகளுக்கும் இனுயிட்டுகளுக்கும் (எஸ்கிமோவர்) சுயாட்சியை வழங்குகிறது.

பிறப்பு வீதம் வீழ்ச்சி கண்டதன் காரணமாக ஆங்கில மொழி பேசும் கனடாவுக்குள் விழுங்குப்பட்டு விடுவோம் என்று கியூபெக் மாகாணத்தவர்கள் அஞ்சிக்கொண்டிருந்தனர். ஆனால் அவ்வச்சத்தை அகற்றும் வகையில் கனடா பாராளுமன்றத்தின் மக்கள் பிரதிநிதிகள் சபையில் கியூபெகிற்கு இருபத்திமூன்று ஆசனங்கள் உத்தரவாதப் படுத்தப்பட்டுள்ளன.

நியமன உறுப்பினர்களைக் கொண்ட செனட் சபை இனி மேல் மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களை கொண்டதாக அமையும் சகல மாகாணங்களுக்கும் செனட்டில் சமவளவான பிரதிநிதித்துவம் இருக்கும்.கியூபெக்கிற்கு விசேட அதிகாரங்களைக் கொடுக்க வேண்டுமென்றால் அதற்கு பிரதியுபகாரமாக சகல மாகாணங்களுக்கும் செனட்டில் சமமான பிரதிநிதித்துவம் தரப்படவேண்டும் என்று கனடாவின் மேற்குப் பகுதியினர் கோரிக்கை விடுத்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கனடாவில் புதிய மாகாணங்களை உருவாக்க எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படக்கூடிய முயற்சிகளையும் சமஷ்டி நிறுவனங்களில் செய்ய உத்தேசிக்கப்படக்கூடிய மாற்றங்களையும் 'வீட்டோ' (ரத்து அதிகாரம்) செய்வதற்கான உரிமையையும் கியூபெக் மாகாணம் வென்றிருக்கிறது.

பேச்சுவார்த்தைகளின் விளைவுகள் குறித்து நான் மிகுந்த மகிழ்ச்சி கொண்டிருக்கிறேன். இருவருட கால நிச்சயமற்ற தன்மையின் பின்னர் உறுதிப்பாட்டை நோக்கி கனடா சென்று கொண்டிருக்கிறது அமைதியிலும் சுபிட்சத்திலும் நம்பிக்கைகொண்ட கியூபெக்கர்கள் இந்த உடன்படிக்கையினால் மகிழ்ச்சியடைவர் என்று ஐந்து நாள் பேச்சுவார்த்தைகளின் இறுதியில் கியூபெக் மாகாண பிரதமர் ரொபேர்ட் போராசா கூறினார்.

உத்தேச சீர்திருத்தங்கள் சமஷ்டி அதிகாரங்களை பெருமளவிற்கு மாகாணங்களுக்கு மாற்றுகிறது. நிலக்கரி தொழிற்துறை, காடுவளர்ப்பு, உல்லாசப் பிரயாணத்துறை நகர விவகாரங்கள் மற்றும் வீடமைப்பு போன்ற விடயங்களில் மாகாணங்களுக்கு பிரத்தியேகமான நியாயாதிக்கங்கள் வழங்கப்படுகின்றன. கலாசாரம், குடிவரவு தொலைத் தொடர்பு, தொழிற்பயிற்சி மற்றும் பிராந்திய அபிவிருத்தி (இவை கோடிக்கணக்கான டொலர்கள் நிதியுடனும் ஆயிரக்கணக்கான சிவில் சேவை வேலை வாய்ப்புக்களுடனும் சம்பந்தப்பட்டவை) ஆகிய விவகாரங்கள் தொடர்பாக மாகாணங்களுடன் உடன்படிக்கைகள் செய்ய வேண்டிய அவசியம் கனடாவின் மத்திய அரசிற்கு இச்சீர்திருத்தங்களின் வாயிலாக கடப்பாடாகிறது.

மாகாணங்களுக்கு இடையேயான உள்வர்த்தக கட்டுப்பாடுகளையும் தடைகளையும் நீக்க வேண்டுமென்ற விடயத்தில் வாய் மூல உறுதிப்பாடொன்றைத் தவிர வேறு எதையும் பிரதமர் மல்ரோணியினால் மாகாண தலைவர்களிடம் இருந்து பெறமுடியவில்லை.

கனடாவின் மாகாணங்களுக்கிடையேயான வர்த்தக கட்டுப்பாடுகள் ஐரோப்பிய சமூகத்தின் உறுப்பு நாடுகளுக்கிடையேயான வர்த்தக கட்டுப்பாடுகளை விட கூடுதலானவையாக இருக்கின்றன என்று சமஷ்டி அதிகாரிகள் முறைப்பாடு தெரிவிக்கிறார்கள்.

கனடாவுடனான தங்களது எதிர்கால உறவு முறையை கியூபெக்கர்கள் தீர்மானிப்பதற்காக அக்டோபர் பிற்பகுதியில் நடத்தப்படவிருக்கும் வாக்கெடுப்புக்கு முன்னதாக உத்தேச சீர்திருத்தங்கள் தொடர்பாக தேசிய சர்வஜன வாக்கெடுப்பொன்றுக்கு பிரதமர் மல்ரோணி உத்தரவிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

> கனடாவுக்குள் தனித்துவமான ஒரு சமூகமாக அரசியலமைப்பு ரீதியாக கியூபெக்கிற்கு அங்கீகாரம் வழங்கப்படுகிறது. கியூபெக்கிற்கென வேறுபட்ட சிவில் சட்டக் கோவை இருக்கும். பிரெஞ்சு மொழி கலாச்சாரம் ஆகியவற்றின் நிலைபேறு உத்தரவாதப்படுத்தப்படுகிறது.

அதிகாரப் பகிர்வு மற்றும் கலாசாரத்தை பேணிக்காப்பதற்கான உத்தரவாதங்களை கனடாவின் அரசியலமைப்பு உள்ளடக்கியிராத பட்சத்தில் அதில் கைச்சாத்திட கியூபெக் 1982 இலிருந்து மறுத்து வந்திருக்கிறது. இதனால் சீர்திருத்தங்கள் அவசியமாகின்றன.

பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கு முன்னரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. தீர்வு காணும் நோக்கில் செய்யப்பட்ட மீச்லேக் உடன்படிக்கை 1990 இல் நிலை குலைந்தது. மீச்லேக் உடன்படிக்கைக்கு அங்கீகாரம் பெறுவதற்கான முயற்சி மனிடோபா மாகாண சட்டசபையில் மேற்கொள்ளப்பட்ட போது சுதேசிகளின் தலைவர் ஒருவர் அதை தடுத்ததனால் தான் அவ்வுடன்படிக்கை தோல்வி கண்டது. இதையடுத்து கியூபெக்கில் பிரிவினைவாத உணர்வுகள் பலமாக கிளம்பின.

சுதேசிகள் வரிகளை அறவிடவும் ஒதுக்கீடுகள் விடயத்தில் தங்கள் அலுவல்களை தாங்களே கவனிக்கவும் புதிய உடன்படிக்கை அனுமதிக்கிறது. 1867 இல் கனடா ஸ்தாபிக்கப்பட்டதன் பின்னர் முதற் தடவையாக கனடாவுக்குள் ஒருமுகப்படும் உணர்வொன்றை இப்போது தான் தாங்கள் கொண்டிருப்பதாக சுதேசி தலைவர்கள் தெரிவித்தனர்.

கனடாவில் முன்னர் ஒரு போதும் தங்களுக்கு கிடைத்திராத அந்தஸ்தொன்றை ஏழு இலட்சத்து ஐம்பதினாயிரம் பூர்வீக குடிகள் பெற்றிருக்கின்றார்கள். வெறுமனே எண்ணிக்கைக்காக குறிப்பிடப்படும் சனத்தொகையாக அன்றி சமூகத்திற்கு பங்களிப்புச் செய்யும் மக்களாக நாம் மாறவிருக்கின்றோம் என்று கனடாவின் சுதேசிகள் கவுன்ஸில் தலைவரான ரொன் ஜோர்ஜ் கூறினார்.

கனடா செய்திருப்பதைப் போன்று. வேறு எந்தவொரு நாடுமே அதன் பூர்வீக சுதேசி மக்களின் கூட்டு உரிமையை இவ்வளவு தூரம் அங்கீகரித்ததில்லை என்று ஒரு தலைவர் குறிப்பிட்டார்.

நன்றி - ராய்ட்டர்

## சேர்பியர்கள் முற்றுகையை முறியடிக்க

## இல. தமிழர் கொள்கையில் மாறுபாடு எதுவும் இல்லை

- கருணாநிதி

புடனும் பிரயோகிக்க முடியுமா? என்பதேயாகும்.

1981 இல் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலே இலங்கையின் தேர்தல் வரலாற்றில் முதல் முதலில் மோசமான சூழ்நிலையில் அதாவது தேர்தல் வரன்முறைகளுக்கு மாறாக இடம்பெற்ற தேர்தலாகும். இத்தேர்தல் ஓர் குழப்பமான சூழ்நிலையில், மோசடிகளுடன் இடம் பெற்றது. இத்தேர்தலை ஆட்சேபித்துப்பதிவான வழக்கும் தள்ளுபடியானது.

வடக்கில் இவ்வாறு ஆரம்பித்த தேர்தல்முறைகேடுகள் இறுதியாக இடம் பெற்ற மாகாண சபைத் தேர்தல்களின் போது உச்சக்கட்டத்தை அடைந்தன. அவ்வேளையில் வடக்கு கிழக்கில் நிலை கொண்டிருந்த இந்திய இராணுவம் துப்பாக்கி முனையில் தேர்தல் ஒன்றை நடத்திக் காட்டியது. யார்யார்அபேட்சகராகப்பதிவுசெய்யலாம்என்பதில் இருந்து வாக்குப் பதிவுவரை துப்பாக்கி முனையில் இடம் பெற்றது. அதாவது துப்பாக்கி முனையில் எவ்வாறு தேர்தல் நடத்துவது என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டாக அமைந்தது.

ஆனால் சட்ட வரம்பிற்கு அப்பாற்பட்டு நடைபெற்ற இத்தேர்தல்கள் யாவும் சிறிலங்கா அரசாங்கத்தின் அங்கீகாரத்தைப் பெற்றன. அவற்றின் அடிப்படையில் மாகாண சபைகளும் உருவாக்கப்பட்டன.

ஆனால் இந்த நிலைமை 1988, 1989 ஆம் ஆண்டுகளில் தென்னிலங்கையில் வேறு ஒரு வடிவத்தில் காணப்பட்டது. ஆயுத முனையில் தேர்தல்கள் குழப்பப்பட்டன. அல்லது நடத்தப்பட்டன. வாக்காளர்கள் பயமுறுத்தப்பட்டார்கள். வாக்குச் சாவடிக்குச் செல்ல மக்கள் அஞ்சினார்கள். சில மாவட்டங்களில் வாக்குச்சாவடிகளே காணப்படவில்லை. இதை யார் குழப்பினார்கள். அரசாங்க கட்சியா? எதிர்க்கட்சியா? அல்லது ஜே. வி. பியா? இதை அறுதியிட்டுக் கூற முடியாது. ஆனால் ஜே. வி. பி. யின் பேரில் தேர்தல்களில் குழப்பங்கள் இடம் பெற்றன என்பதே உண்மை.

ஆனால் இவ்வாறான வன்முறைகளுக்கு மத்தியில் நடைபெறும் தேர்தல்களின் போது நீதிபதிகள் கருதியது போன்று தேர்தல் முடிவுகளில் மாற்றங்களை ஏற்படுத்தாமல் இருக்கலாம். இதற்கும் மேலாக வெற்றி பெற்றவர்கள் மேலும் கூடுதலான வாக்குகளையும் பெற்றிருக்கலாம். ஆனால் இதில் சர்ச்சை வெற்றி குறித்ததுமட்டுமல்ல தேர்தல் சட்டங்களும், வாக்காளர்களின் உரிமைகளும் பற்றியதாகும். வன்முறையின் மத்தியில் நடந்த தேர்தல்களில் இவை மீறப்படவில்லை என யாராலும் கூறமுடியுமா? இந்நிலையில் நடந்த தேர்தல்கள் செல்லுபடியாகுமா? இவையே இன்றுள்ள பிரச்சினை.

# சேர்பியர்கள் முற்றுகையை முறியடிக்க முஸ்லிம் படைகள் தாக்குதல்

பொஸ்னியா ஹெர்சகோவினாவின் தலைநகர் சரயோவோவின் மீதான சேர்பியர்களின் முற்றுகையை முறியடிப்பதற்கான தாக்குதல்களை முஸ்லிம் படைகள் நேற்று முன்தினமும் தொடர்ந்து நடாத்தின. இதனால் சரயோவோ உட்பட சில இடங்களில் சண்டைகள் நடந்ததாய் தெரிய வருகிறது.

தொராசே பட்டினத்தில் இருந்து சேர்வியப் படைகள் குறைந்த பட்சம் 18 கிலோ மீற்றர் வரை பின்வாங்கியுள்ளன. இதனால் கொராசே மீதான முற்றுகை முடிந்து விட்டதாக தெரிகிறது. இந்நகரம் கடந்த மூன்றரை மாதங்களுக்கும் மேலாக முற்றுகையின் கீழ் இருந்து வந்தது. வெளி உலக தொடர்புகள் யாவும் துண்டிக்கப்பட்டிருந்தன.

சண்டையிடும் குழுக்களுக்கிடையே லண்டன் மாநாட்டில் ஏற்பட்ட உடன்பாட்டிற்கமையவே கொராசே மீதான சேர்பிய படைகளின் முற்றுகை கைவிடப்பட்டதாக சேர்பிய தரப்பு தெரிவித்தது.

## ஷியாக்களை தாக்கினால் அமெரிக்க கூட்டணி தாக்கும்

### - ஈராக்கிற்கு அமெரிக்கா எச்சரிக்கை

(வாஷிங்டன்)

ஷியா முஸ்லிம்களுக்கு எதிராக தரைத்தாக்குதல் நடத்த கடந்தசில வாரங்களாக ஈராக் திட்டமிட்டு வரும்அறிகுறிகள் தென்படுவதாகவும் இவ்விஷயத்தில்அமெரிக்காவின்பதில்நடவடிக்கைஎப்படியிருக்கும்என்பதை சதாம் ஹுசைன்பாரதூரமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என அமெரிக்கா எச்சரித்துள்ளது.

இது குறித்த எச்சரிக்கையினை அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் பிரென்ஸ்கோ கிராப்ட் விடுத்துள்ளார்

அமெரிக்கா எத்தகைய நடவடிக்கை எடுக்கும் என்பதை நான் சொல்லவிரும்பவில்லை. ஆனால் சதாம் மிகப்பாரதூரமாகச் சிந்திக்க வேண்டும். ஷியாக்களுக்கு எதிராக தாக்குதல் நடத்தினால் என்ன செய்வது என்பது குறித்து அமெரிக்காவும் அதன் வளைகுடா நேச நாடுகளும், பிரான்ஸ், பிரித்தானியா போன்ற நாடுகளும் ஒரு பொது உடன்பாடு கொண்டிருக்கின்றன என்றும் அவர் தெரிவித்தார்.

## எதிராளிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும்

### - சதாம் ஹுசைன் உறுதி

(பாக்தாத்)

வல்லரசுகள் வளைகுடா கூட்டணிக்கு அரபு நாடுகள் உதவக் கூடாது. அப்படி உதவும் நாடுகள் அதற்கேற்ப பலன்களை அனுபவிக்க வேண்டி ஏற்படுமென ஈராக்கிய ஜனாதிபதி சதாம் ஹுசைன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சதாம் ஹுசைன் ஈராக்கிய மக்களுக்கு விடுத்துள்ள செய்தியொன்றிலேயே இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

எதிராளிகள், குர்திஷ் வடக்கு, ஷியா தெற்கு, சுனி மத்தியென ஈராக்கைப் பிரிக்கும் திட்டத்தை கொண்டுள்ளார்கள் இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும். அது இராணுவ நடவடிக்கையாக அல்லது வேறு விதமான நடவடிக்கை எடுக்கப்படும்.

ஈராக் மக்களின் ஒருமைப்பாடும் மன உறுதியும் எதிராளிகளைத் தோல்வி காணச் செய்யுமெனவும் ஈராக்கிய ஜனாதிபதி சதாம் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## ஈராக் மீது அமெரிக்கா ஆக்கிரமிப்புச் செய்கிறது

### -கியூபா குற்றச்சாட்டு

(ஹவானா)

அமெரிக்காவும் அதன் கூட்டணி நாடுகளும் ஈராக் தென்பகுதியில் விமானங்கள் பறப்பதற்குத் தடையுத்தரவு விதித்ததற்கு கியூபா அதிருப்தி தெரிவித்துள்ளது.

கியூபா வெளிவிவகார அமைச்சு கடந்த ஞாயிற்றுக் கிழமை விடுத்த அறிக்கையில் இதுபற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இன்னொரு வகையான ஆக்கிரமிப்பு தலையீடு என்றும் ஒரு நாட்டின் உரிமைக்கு எதிராக இராணுவ பலம் திணிக்கும் அமெரிக்காவினதும் அதன் சக நாடுகளினதும் நடவடிக்கைக்கு கியூபா கண்டனம் தெரிவிக்கின்றது என்றும் பிராந்தியத்தில் நிலவும் தீவிர மோதல்களை நிறுத்துவதாக மேற்கொள்ளப்படும் சர்வதேச நியதிக்கு முரணான நடவடிக்கை சர்வதேச சமாதானத்தையேஇழக்கச்செய்வதாக அமையலாமெனத் தெரிகிறது என்றும் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

## கசகிஸ்தான் அதிபர் ரஷ்ய ராணுவத்திடம் தஞ்சம்

முன்னாள் சோவியத் குடியரசுகளுள் ஒன்றான கசகிஸ்தானின் அதிபர் ரஷ்ய இராணுவத் தளமொன்றில் புகலிடம் தேடியுள்ளதாய் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதிபரின் வாசஸ்தலத்தைச் சுற்றி மக்கள் திரண்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

## இல. தமிழர் கொள்கையில் மாறுபாடு எதுவும் இல்லை

### - கருணாநிதி

இலங்கைத் தமிழர் பற்றிய தி. மு. க. வின் கொள்கையில் எந்த மாறுபாடும் இல்லை என்று தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி தெரிவித்தார். அவர் மேலும் கூறுகையில் விடுதலைப் புலிகள் உட்பட மற்ற தமிழ்க் குழுக்கள் மீதான தமது கட்சியின் ஆதரவை விலக்கிக் கொண்டிருப்பதால் இலங்கைத் தமிழரின் இனப்பிரச்சினை சம்பந்தமாகத் தமது கட்சியின் கொள்கை மாறிவிட்டது என்று பொருளல்ல என்றும் தெரிவித்துள்ளார்.

## திரிபுரா கிராம மக்கள் மனநோயால் பாதிப்பு

(டில்லி)

வடகிழக்கு இந்திய மாநிலமான திரிபுராவில் உள்ள கிராமம் ஒன்றில் வாழும் பெருமளவிலான மக்கள் மனநோயினால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த மக்கள் ஆடுகிறார்கள் பாடுகிறார்கள், சத்தமிட்டு அழுகிறார்கள் களைப்படையும்வரை இவற்றைச் செய்கிறார்கள். இவ்வாறான காரணத்தினால் சகஜ மனோநிலை கொண்ட சகலரும் பீதியினால் அக்கிராமத்தை விட்டு ஓடிவிட்டார்கள்.

கடந்த சில நாட்களாக இக்கிராம மக்கள் ஏன் இவ்வாறு வழமைக்கு மாறாக நடந்து கொள்கிறார்கள் என்பதை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக இரு மனோவியல் நிபுணர்கள் அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று திரிபுரா மாநில சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்துள்ளார் என்று யு. என். ஐ, செய்தி ஸ்தாபனம் அறிவித்தது.

திரிபுராவின் தலைநகர் அகர்த்தலாவில் இருந்து அறுபது மைல்கள் தொலைவில் உள்ள கரோபாமா என்ற கிராம மக்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

## 43 ஆபிரிக்கர்கள் ஸ்பெயினில் கைது

(மட்றிட்)

ஸ்பெயினுக்குள் நுழைய முயன்ற 43 ஆபிரிக்கர்கள் ஸ்பெயின் பொலிசாரால்கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஈழநாதம்

வளர்முக நாடுகளை

## இராணுவ, பொருளாதார ரீதியில் மேற்கு நாடுகள் நிர்ப்பந்திக்கின்றன

### அணிசேரா நாடு தலைவர்கள் தெரிவிப்பு

(ஜாகர்த்தா)

மேற்கு நாடுகள் இராணுவ ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் வளரும் நாடுகளின் மீது நிர்ப்பந்தங்களைப் பிரயோகித்துவருவதாக அணிசேரா நாடுகளின் தலைவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

தற்போது இந்தோனேசியா தலைநகர் ஜாகர்த்தாவில் நடைபெறும் அணிசேரா நாடுகளின் தலைவர்கள் மாநாட்டில் பேசிய இந்தியப் பிரதமர் பி.வி. நரசிம்மராவ் மற்றவர்களால் விதிக்கப்படும் மனித உரிமைத் தடைகளை ஏற்றுக் கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொண்டார். அத்துடன் தங்களுடைய உள்ளூர் கலாசார பாரம் பரியங்களை ஏற்றுக் கொள்ளாமல் மேற்கு நாடுகள் மனித உரிமைப் பிரமாணங்களைப் பலவந்தமாகத் திணிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும், மேற்கு நாடுகள் ஆயுத பலம் கொண்டு வளரும் நாடுகளை மிரட்டுவதாக வடகொரியா குற்றம் சாட்டியது மேற்கு நாடுகள் இராணுவ அரசியல் ரீதியான அழுத்தங்களைப் பிரயோகிப்பதாகவும், ஐக்கிய நாடுகள் சபையைத் தவறானமுறையில்வழிநடத்துவதாகவும். அது மேலும் கூறியது இதேபோன்ற குற்றச் சாட்டுக்களை ஈரானிய அதிபர் அலி அக்பர் ரப்சன்ஜானியும் தெரிவித்தார்.

## 40,000 இரசாயன ஆயுதம் ஈராக்கில் அழிக்கப்படும்

(பாக்தாத்)

ஏறத்தாழ நாற்பதினாயிரம் இரசாயன ஆயுதங்கள் ஈராக்கில் அழிக்கப்படவுள்ளன எனத் தெரியவருகிறது

ஐ நா.வின் ஆயுதப் பரிசோதகர்கள் குழுநேற்று முன்தினம் தமது நடவடிக்கைகளை ஈராக்கில் ஆரம்பித்தன இத்தாலியரான மொறிசியர் சபரோரோலைத் தலைவராகக் கொண்ட இக்குழு கடந்த திங்கட்கிழமை பாக்தாத்திற்கு வந்து சேர்ந்தது. எதிர்வரும் 7-ம் திகதி வரை இக்குழு ஈராக்கில் தங்கியிருக்கும். தமது பணிகளில் ஈராக் ஒத்துழைப்பதாயும் தெரிவித்துள்ளனர்.

ஆயுதங்களை அழிப்பதானது வளைகுடாப் போர் முடிவில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையில் அடங்கியுள்ளமை தெரிந்ததே.

ஐ நா. தலைமையகம் மீது

## பீரங்கி தாக்குதல் ஐந்து பேர் காயம்

சரயேவோ நகரில் இருக்கும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு படையின் தலைமை அலுவலகம் நேற்று மீண்டும் பீரங்கிகளால் தாக்கப்பட்டு ஐந்து பேர் காயமடைந்துள்ளனர் இவ்வாறு காயமடைந்தவர்களில் எகிபது நாட்டைச் சேர்ந்த கேணல் ஒருவரதும், பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த இரண்டு அதிகாரிகளதும் நிலைமை மே சமாக இருப்பதாக தெரியவருகின்றது

தமிழ்நாட்டிலும். கேரளத்திலும்

## வாக்காளர் பட்டியலில்பதிய இலங். தமிழர் முயற்சியாம்

இந்தியாவின் தமிழ்நாடு, மற்றும் கேரள மாநிலங்களில் உள்ள வெளிநாட்டவர்கள் தமது பெயர்களை வாக்காளர் இடாப்புகளில்பதிந்துவருவதாக அங்கிருந்து வரும்செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனால் பெயர்களைப் பதிவு செய்யும் பொழுது எச்சரிக்கையுடன் செயற்படும் படியும் பதிவு அதிகாரிகளைத் தேர்தல் கமிசன் கேட்டுக் கொண்டுள்ளது.

தமிழ் நாட்டிலும் கேரளத்திலும் தங்கியுள்ள பெருந் தொகையான இலங்கையர்களும் தமது பெயர்களை தேர்தல் இடாப்புகளில் பதிவு செய்ய முயற்சித்து வருவதாகப் கூறப்படுகின்றது.

## சுங்கப் பரிசோதகர் பதவி; போட்டிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

இலங்கை சுங்கத் திணைக்களம் சுங்கப் பரிசோதகர் தரம் இரண்டு பதவிக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கான போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருக்கின்றது.

இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு க. பொ. த. சாதாரண தரத்தில் ஆங்கிலம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும் இதில் தமிழ், கணிதம் உட்பட ஐந்து பாடங்களில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது இதற்குச்

## 29 பேர் விடுதலை

(வவுனியா)

மூன்று மாதகாலமாக மகசீன் சிறைச்சாலையில் தடுப்புக் காவலில் வைகப்பட்டிருந்த தமிழர்களில் 29 பேர் வவுனியாவில் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது

இவர்கள் தடைசெய்யப்பட்ட பொருள்களைத் தாண்டிக்குளம் இராணுவத் தடை முகாம் ஊடாக வடபகுதிக்கு கொண்டு செல்ல முயன்றபோது பிடிக்கப்பட்டு கொழும்பு மகசீன் சிறைச்சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்றும்,

கிளர்ச்சித் தடுப்பு பிரிவினரால் கொழும்பிலிருந்து அழைத்து வரப்பட்டு வவுனியா மாவட்ட நீதிவான் முன்னிலையில் விடுதலை செய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## வருடாந்த உற்சவம்

(யாழ்ப்பாணம்)

நவாலி அந்திரான் முருகமூர்த்தி கோவிலின் வருடாந்த உற்சவம் நேற்றுக் காலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து பன்னிரண்டு தினங்கள்வரைநீடிக்கும் இந்த உற்சவம் எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறும் வைரவ மடையுடன் நிறைவெய்தும். இந்த உற்சவத்தின் போதான கைலாச வாகனத் திருவிழா எட்டாம் திகதியும் தேர்த் திருவிழா பத்தாம் திகதியும் நடைபெறவுள்ளன.

## மாவீரரை நினைவு கூரும் நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

மயிலிட்டிப் பிரதேச மாவீரர்களை நினைவு கூரும் நிகழ்ச்சி எதிர்வரும் சனிக்கிழமை மாலை 6 மணிக்கு பருத்தித்துறை பழைய சந்தை மைதானத்தில் நடைபெறும்.

இடம் பெயர்ந்த மயிலிட்டி கடல் தொழிலாளர் ஒருங்கிணைப்புச் சங்கத்தினால் நடத்தப்படும் இந் நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரமுகர்களின் நினைவுரைகளும் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (பா)

---

ஐம்பது

டார்.

டி.லிவேரா தொடர்ந்து பேசும்போது, சிறிலங்காவுக்கு அந்நியச் செலவாணியை ஈட்டித் தரும் கோட்டத்தொழில் துறை இன்று இந்தியாவின் கையில் உள்ளது. இது எமது வெளியுறவுக் கொள்கையைப் பகிரங்கமாக அவமானப்படுத்துவதாக அமையாதா என்று கேள்வி எழுப்பினார்.

ஐ. நா. பாதுகாப்பு சபையில்

## வல்லரசுகளின் ரத்து அதிகாரம் நீக்கப்பட வேண்டும்

### ஈரான், சிரியா வலியுறுத்து

(ஜாகர்த்தா)

ஐ நா. சபையில் ரத்து அதிகாரத்தைக் கொண்டிருக்கும் ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளிடமிருந்தும் ரத்து அதிகாரத்தை எடுத்துவிட்டு ஐ நா. சபையில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகள் அனைத்துமே சமமான நாடுகள் என்ற நிலை உருவாக வேண்டும் என்று சிரியா. ஈரான் ஆகிய நாடுகள் கோரியுள்ளன.

இந்தோனேசியத் தலைநகர் ஜாகர்த்தாவில் நடந்து வரும் அணிசேரா நாடுகள் உச்சி மாநாட்டில் உரையாற்றிய ஈரான் ஜனாதிபதி ரங்ஜானி, சிரியா உதவி ஜனாதிபதி அப்துல் கதாம் ஆகியோர் இவ்வாறு கோரியுள்ளனர்.

அமெரிக்கா, ரஷ்யா, பிரான்ஸ், பிரித்தானியா, சீனா என இந்த ஐந்து நாடுகளிடமுள்ள 'வீடோ' என்ற நிராகரிக்கும் ரத்து அதிகாரத்தை இல்லாமல் செய்ய வேண்டும் என்றால் மேற்படி ஐந்து நாடுகளுமே இதற்கு இணங்க வேண்டும் இந்த மாநாட்டில் கலந்து கொண்டுள்ள ஐ.நா. சபையின் பொதுச் செயலர் பூட்ரோஸ் பூட்ரோஸ்காலி கூறியிருக்கிறார்.

## இளம் பெண் தற்கொலை

பெற்றோருடன் ஏற்பட்ட தகராறு காரணமாக இளம் பெண் ஒருவர் அலரி விதை உட்கொண்டு தற்கொலை செய்துகொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்று மாலை பெற்றோருடன் ஏற்பட்ட தகராறினால் அளவெட்டிவடக்கைச் சேர்ந்த ஜெயா (வயது 20) என்பவரே யாழ் போதனா வைத்திய சாலைக்கு எடுத்துவரப் பட்ட போது வழியில் மரணமானார்.

இவரது சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ச.க)

## உரும்பராயில் திருவள்ளுவர் விழா

உரும்பராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இன்று மூன்றாம் திகதி முதல் மூன்று நாட்களுக்கு மிகவும் கோலாகலமான முறையில் திருவள்ளுவர் விழா நடைபெற ஏற்பாடாகியுள்ளது. முதல் நாள் நிகழ்ச்சியில் திரு யோகரத்தினம யோகி அவர்களின் சிறப்புரையைத் தொடர்ந்து திருக்குறள் ஆய்வுரையும் கவியரங்கமும், காணி நிலம் வேண்டும். என்றும் நாடகம் உட்பட கலை நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளன இரண்டாம் நாளில் விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவைச் சேர்ந்த செல்வி ஜெயா, செல்வி ஆர்த்தி, செல்வி மாலினி ஆகியோரின் சிறப்புரைகளும் கருத்தரங்கம் மற்றும் ஆய்வுரைகளோடு ''சீதன அம்புகள்'' நாட்டிய நாடகமும் இடம் பெறும். தொடர்ந்து மூன்றாம் நாளில் விடுதலைப் புலிகள் மூத்த உறுப்பினரான வெ இளங்குமரனின் சிறப்புரையைத் தொடர்ந்து ஆய்வுரையும், பட்டிமன்றம் மற்றும் 'மண்ணும் மாவீரனும்' நாட்டிய நாடகம் என்பவையும்

தியாகி திலீபன் நினைவு

## இதுவரை நடைபெற்ற போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

தியாகி திலீபன் நினைவாக நடத்தப்பட்டு வரும் போட்டிகளில் இதுவரை வெளியான முடிவுகளின் படி :

| | தங்கம் | வெள்ளி | வெண்கலம் |
|---|---|---|---|
| சண்டிலிப்பாய் | 03 | 03 | 02 |
| உடுவில் | 01 | 01 | — |
| தெல்லிப்பழை | 01 | 01 | 01 |
| யாழ்ப்பாணம் | 01 | — | 01 |
| பருத்தித்துறை | — | 01 | — |
| பளை | — | — | 01 |
| நல்லூர் | — | — | 01 |

இன்று

## 45ஆம் நாள் நினைவு

மலர்வு: 24 — 12 — 1934



உதிர்வு: 21 — 07 — 1992

### ம. இம்மனுவேல் (யேசுராசா)

அன்பு வழிந் தொழுகு மெழில்
வதனத் தந்தாய்
ஆருயிரே எம்மகத்தின் குலவிளக்கே
இல: 6, பாசமுடன் நினைந்திருக்கும்
அடப்பன் வீதி மனைவி,மக்கள்,மச்சான்,

## முன்னாள் போலாந்து பிரதமர், மனைவி கொலை

போலந்து நாட்டின் முன்னாள் பிரதமரான ஜெருகல்ஸ்கியும், அவரது மனைவியும் அவரது இல்லத்தில் வைத்து படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இக்கொலைச் சம்பவம் எவ்வாறு இடம்பெற்றது என்பது பற்றிக் கருத்துக் கூற அந்நாட்டுப் பொலிசார் மறுத்து விட்டனர்.

---

## இடமாற்றம்

யாழ்ப்பாண மாவட்டத்தின் விவாகம் - வலிகாமம் மேற்குப் பகுதி, பிறப்பு, இறப்பு - பண்டத்தரிப்புப் பிரிவின் பதிவுகாரராகிய திருமதி பரிமளம் சோமசுந்தரம் அண்மையில் நடந்த அசம்பாவிதம் காரணமாக பாதுகாப்புக் கருதி தற்காலிகமாக இடம்பெயர்ந்து பின்வரும் விலாசத்திற்கு தனது கந்தோரை மாற்றி அமைத்திருக்கிறார்.

**திருமதி ப. சோமசுந்தரம்**
மே/பா திரு. ஆர் சாம்பசிவம்
முதலாம் கட்டை,
''தமயஸ்தான்''
உடுவில்,
சுன்னாகம்.

[சி/4992]

---

இடம் பெயர்ந்த மயிலிட்டி கடற்றொழிலாளர்
ஒருங்கிணைப்புச் சங்கம்
மயிலிட்டிப் பிரதேச

## மாவீரர்களை நினைவு கூரும் நிகழ்ச்சி

காலம்:- 05 - 09 - 92 சனிக்கிழமை மாலை 6 மணி
இடம்:- பருத்தித்துறை பழைய சந்தை மைதானம்

தமிழீழ விடுதலைப்புலிகள் பிரமுகர்களின் நினைவுரையும் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

சகலரும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இடம் பெயர்ந்த மயிலிட்டி கடற்றொழிலாளர்
ஒருங்கிணைப்புச் சங்கம்.

[3122]

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 3 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

---

வேண்டும். அல்லது இதற்குச் சமமான தராதரம் பெற்றிருத்தல் வேண்டும்.

18 வயதிற்கும் 40 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் இப்போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும்.

பரீட்சைக் கட்டணமாக 100 ரூபா தபால் அலுவலகத்தில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச் சீட்டை விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும் விண்ணப்பங்கள் அனைத்தும் சுங்கப் பணிப்பாளர் நாயகம், இலங்கைச் சுங்கத் திணைக்களம், 05 ஆம் மாடி, டைம்ஸ் கட்டடம், கொழும்பு- 01 என்ற முகவரிக்கு இம்மாதம் 4 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களையும் விண்ணப்பப்படிவத்தையும் கடந்தமாதம் 14 ஆம் திகதி வர்த்தமானியில் பார்வையிடலாம். (க)

---

## இறந்தோர் தொகை 24 ஆக அதிகரிப்பு

அம்பாறை மாவட்டத்தில் இருக்கும் சாய்ந்தமருது பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் காயமுற்றிருந்த இருவர் நேற்று மரணமடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் இச் சம்பவத்தில் உயிர் இழந்தோர் எண்ணிக்கை இருபத்துநான்காகஉயர்ந்துள்ளது

---

### மட்டுப்

ணுவத்தினர் கடும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்

கடந்த வாரம் வடபகுதிக்கு தடை விதிக்கப்பட்ட பொருள்களை ஏற்றிச் சென்றதாக குற்றஞ்சாட்டி ஆறு உழவு இயந்திரங்களை இராணுவம் மறித்து வைத்துள்ளது. மேற்படி ஆறுஉழவுஇயந்திரங்களில் வந்தோரும் கைது செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகின்றனர்என்றும் தெரிவிக்கப்படுகிறது.

---

கேள்வி எழுப்பினார்.

அந்நியத்தோட்ட முதலாளிகள் சிலர் எமது தோட்டங்கள் சிலவற்றில் ஏலவே உள்ளனர். இவர்கள் நாம் கட்டிக்காத்து வந்த எமது மண்ணில் எமக்கு அந்நியமான தொழில் நுட்பங்களைப் பாவித்து குறுகிய காலத்தில் கூடிய பயனைப் பெற விரும்புகிறார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

தோட்டத்துரைமார் சங்கத் தலைவர் தெரிவித்த இக்கருத்துக்களை அரசு, அதற்குச் சொந்தமான வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் மூலம் மறுத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

---

### கிழக்கிலங்கையில்

முஸ்லிம் கிராமங்களை அண்டியுள்ள தமிழ்க் கிராமங்களில் இருந்து மக்கள் வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்கு செல்வதாகவும் மேலும் தெரியவருகிறது

இதேவேளை கிழக்கு மாகாணத்தில் இராணுவத்தினர் மீது புலிகள் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சம் காரணமாக ஆயுதப்படையினரின் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப் பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, சாய்ந்தமருது சம்பவத்தையடுத்து பள்ளிவாசலில நடைபெறும் தொழுகைக்குப் பின்னர் அசம்பாவிதம் நிகழும் சாத்தியம் இருப்பதால் பள்ளிவாசல் சுற்றுப்புறங்களுக்கு இராணுவம் அழைக்கப்பட்டிருப்பதாக மேலும் தெரியவருகிறது

---

### அரசியல் அமைப்பு

களுக்கும் சமஷ்டி அரசியலமைப்பு முறையே தீர்வொன்றைக் கொண்டு வரும் என்றும், இப்போதுள்ள அரசியலமைப்பில் திருத்தங்களைச் செய்வதன் மூலம் இனப்பிரச்சினை தீர்வுக்கான வழிவகைகளை காணமுடியாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

---

டிய நாடகம் என்பவையும் இடம்பெறவுள்ளது (3)

---

### அம்பாறை

இறந்தவர்களது ஜனாசா நல்லடக்கத்தின் பின்னர், அரசுக்கு எதிராகவும், தமிழருக்கு எதிராகவும் முஸ்லிம்கள் உரத்த குரலில் கோஷம் எழுப்பி உள்ளனர்.

---

### முஸ்லிம்கள்

முஸ்லிம்கள் படுகொலையாவது தொடர்வதாக குறிப்பிட்டார்.

எனவே முஸ்லிம்களை பாதுகாக்க தனி முஸ்லிம் படை ஒன்று அவசியம் என்பதை அரசு இனியாவது ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

---

### பிரச்சினையை

மனையில் எழுபத்தொரு திருமணங்களும், சுன்னாகம் பணிமனையில் இருபத்திரண்டு திருமணங்களும் சாவக சேரிப் பணிமனையில் முப்பத்திரண்டு திருமணங்களும், கோப்பாய் பணிமனையில் பதினேழு திருமணங்களும், பருத்தித்துறை பணிமனையில் இருபத்தைந்து திருமணங்களும், சங்கானைப் பணிமனையில் இருபத்து நான்கு திருமணங்களும், குற்றப் புலனாய்வு பணிமனையில் பதினேழு திருமணங்களும், நடாத்தி வைக்கப்பட்டுள்ளன

சம்பந்தப்பட்ட காதலர்களின் முறைப்பாட்டின் அடிப்படையில் நடாத்தி வைக்கப்பட்ட இத் திருமணங்கள் சாதி, மத, வர்க்க வேறுபாடுகளுக்கு அப்பால் மனிதனை மனிதனாக நோக்கும் மனிதத்துவ அடிப்படையில் நீதியாகவும் நேர்மையாகவும், எமது மக்களால் ஏற்றுக்கொள்ளக் கூடிய முறையில் தீர்க்கப்பட்டு சம்பந்தப்பட்ட ஆணும், பெண்ணும் இல்லற வாழ்வில் இனிதே இணைக்கப்பட்டு உள்ளனர் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

---

அடப்பன் வீதி
3-ம் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். (3121)

நினைந்து நெக்கும்
மனைவி, மக்கள், மச்சான்,
சகோதரன் சகோதரி,
உற்றார், உறவினர்,

---

## கெல்ற் (GELT) ஆங்கில வகுப்பு 1992

1992-09-1-ம் திகதி ஆரம்பமான மேற்படி கற்கை நெறி பின்வரும் நிலையங்களில் தொடர்ந்து நடைபெறும். இப்பயிற்சி நெறியில் 600ற்கு மேற்பட்ட மாணவர்கள் பதிவு செய்து பயிற்சியையும் ஆரம்பித்துள்ளனர். இதுவரை பதிவு செய்யாதோர் தத்தம் வதிவிடங்களைக் கருத்திற்கொண்டு அண்மையில் உள்ள நிலையங்களில் தாமதமின்றி பதிவு செய்து கற்கை நெறியை தொடருமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றனர்.

நிலையங்கள்

01. யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி
02. யாழ். இந்து மகளிர் கல்லூரி
03. மானிப்பாய் இந்துக் கல்லூரி
04. இராமநாதன் கல்லூரி
05. ஹாட்லிக் கல்லூரி
06. சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி

2-9-1992 (சி/4993) பிரதேச கல்விப்பணிப்பாளர்
(யாழ்ப்பாணம்)

---

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள் 02-09-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம் 5459

வடபகுதிக்கு உள்ளே அனுமதிதத வாகன இலக்கம்:

27-4162, 41-7563, 28-1049, 28-1110, 28-1706, 24-4774, 26-763, 22-7003, 42-2355, 24-4745, 28-1185, 41-8031, 26-5814, 27-7263, 26-4436, 42-3267, 41-4129, 24-9967, 24-1209, 26-3321

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்:

40-7207 27-9756, 26-0382, 26-4792, 27-7794 22-3611, 22-4766, 26-5563, 26-4393 24-6972, 27-2016 42-9995, 42-9220, 24-5774, 24-5529, 26-1735, 41-5178, 26-5157, 41-1462, 40-0630, 24-6699 42-3924, 42-0488